## கோவை முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
### முன்னிலை:- திரு.த.ராஜேந்திரன் எம்.எ.பி.எட்.எம்.பில்.,

ப.மு.எண் 647 /ஆ4/2012 நாள் 13. 02.2012

---------

பொருள் : மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் ஒப்புதல் வழங்கி ஆணையிடல் சார்பாக.

பார்வை: 1.Code of Regulations for approved Nursery & Primary schools G.O M.S No 484 dated 24.04.91 As amended in G.O .M.S No.349 Education Dated 31.03.93.
2.அரசாணை நிலை எண் 117/பள்ளிக் கல்வி (க்யு,1) துறை நாள் 07.09.2004.
3.அரசாணை நிலை எண் 178/பள்ளிக் கல்வி (க்யு.1) துறை நாள்14.09.2004.
4.சென்னை– 6 தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 30219/எப்/2005 நாள் 19.02.2007.
5.பள்ளி பார்வை அறிக்கை நாள் 27.012012.

-----

கோவை வருவாய் மாவட்டம் , அன்னூர் ஒன்றியம் இயங்கி வரும் அல்போன்சா மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிக்கு கருத்துருக்கள் ஒப்புதல் வழங்க பெறப்பட்டுள்ளது.

பள்ளியின் பெயர் -- அல்போன்சா மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, கணக்கு பிள்ளைத் தோட்டம் ,ஒட்டர்பளையம் அஞ்சல் கோயம்புத்தூர் – 641543

வகுப்புகள் -- எல் .கே.ஜி முதல் 5 ம் வகுப்பு வரை

காலம் --- 01.06.2010 முதல் 31.05 .2013 வரை

கட்டிட உரிமம் மற்றும் உறுதிச் சான்று மற்றும் நிலைய அலுவலர்,தீயனைப்பு மற்றும் மீட்பு பணி நிலையம் கோவை தெற்கு , வழங்கிய தடையின்மைச் சான்று ஆகியவற்றின் அடிப்படையிலும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

11) தமிழ்மொழி கண்டிப்பாக கற்பிக்கப்பட வேண்டும்.

2) மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப போதுமான கட்டிட வசதி ,கழிப்பிட வசதி (ஆண், பெண் தனித்தனியே ) குடிநீர் வசதி தளவாட வசதி ஏற்படுத்தப்படல் வேண்டும்.

3) உடற்பயிற்சிக் கல்விக்கு போதுமான இடம் ஒதுக்கப்படல் வேண்டும்

4) முழுவதும் போதுமான ஆசிரியர் பயிற்சி பெற்ற பெண் ஆசிரியைகளையே நியமித்தல் வேண்டும்.

5) பொது மற்றும் தொழிற்கல்விச் சான்றிதழ்கள் தற்காலிக நிறுத்தம் அல்லது இரத்து செய்யப்பட்டிருந்தால் அச்சான்றிதழுக்குரிய ஆசிரியர்களையும் ஆசிரியர் பணிக்கு தகுதியற்ற ஆசிரியர் என அறிவிக்கப்பட்ட ஆசிரியர்களையும் அல்லது நீதிமன்ற மூலம் தண்டனை பெற்ற ஆசிரியர்களையும் மேற்கண்ட பள்ளியில் நியமித்தல் கூடாது.

6) நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டத்தினையே பின்பற்றல் வேண்டும்.

7) பள்ளி கட்டிட உரிமம் மற்றும் உறுதிச் சான்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கைக்கு மிகாமல் மாணவர்களை சேர்க்கப்பட வேண்டும்.

8) ஒப்புதல் புதுப்பித்தல் காலம் முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் புதுப்பித்தல் கருத்துருக்களை முறையாக சம்பந்தப்பட்ட அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

09)ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்களின் கல்விச் சான்றுகள் உண்மைத் தன்மை பெற வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்
கோயம்புத்தூர் –641001

பெறுநர்
நிர்வாகி

அல்போன்சா மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, கணக்கு பிள்ளைத் தோட்டம் ,ஒட்டர்பளையம் அஞ்சல் அன்னூர் – 641543

நகல்:

1)மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர், கோயம்புத்தூர் – தொடர் நடவடிக்கையின் பொருட்டு
2)உதவித் தொடக்கக் கல்வி அலுவலர், அன்னூர் –தொடர் நடவடிக்கையின் பொருட்டு
3) சென்னை–6 தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது. அலுவலகக் கோப்புக்கு உபரி–1

## கோயம்புத்தூர் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
**ந.க.எண் 3283 /அ5/2016 நாள்: 04.11.2016**
**ஐப்பசி –19, திருவள்ளுவராண்டு–2047**

பொருள்: தொடக்கக்கல்வி – தமிழ்நாடு குழந்தைகள் இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்ட விதி 2011 விதி 12 உப விதி(4) மற்றும் தமிழ்நாடு மழலையர் மற்றும் துவக்கப்பள்ளியின் விதித்தொகுப்பின் கீழ் தொடர் அங்கீகார ஆணை வழங்குதல் – சார்பாக

பார்வை :
1) அரசாணை எண்49 பள்ளிக்கல்வித்துறை நாள் 01/03/2007
2) குழந்தைகள் இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம்–2009
3) தமிழ்நாடு பள்ளிகள் (கட்டண நிர்ணயம்) சட்டம் 2/2009
4) தமிழ்நாடு சமச்சீர் கல்வி சட்டம் 2010
5) தமிழ்நாடு இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம்–2011
6) மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பு W.P No.95/2010, நாள் 12/04/2012
7) அரசாணை நிலை எண் 270 பள்ளிக்கல்வி (எக்ஸ்–2)த்துறை நாள் 22–10–2012, அரசாணை (1டி) எண். 264 நாள் 6/7/2012 மற்றும் அரசாணை நிலை எண்59, பள்ளிக்கல்வித்(PL2)துறை நாள் 12/05/2014
8) அரசாணை எண்.145 பள்ளிக்கல்வித்துறை நாள்18/9/2014
9) கோயம்புத்தூர் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் மூ.மு.எண்.148 /அ5/2015 நாள் 19.05.2015
10) தாளாளர்/நிர்வாகி அவர்களின் கடித நாள் 21.06.2016
11) உதவித்தொடக்கக்கல்வி அலுவலர் அன்னூர் கடிதம் ந.க.எண். 993 /அ1/2016 நாள் 27.06.2016

-----------

பார்வையில் காண் அரசாணைகள், சட்டங்கள், விதிகள், ஆவணங்கள் மற்றும் ஆய்வுக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்க்காணும் மழலையர் மற்றும் துவக்கப்பள்ளிக்கு புதுப்பித்தல் ஆணை கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி தற்காலிகமாக வழங்கப்படுகிறது.

-----------

| | | | |
|---|---|---|---|
| 1 | புதுப்பித்தல் அளிக்கப்படும் பள்ளியின் பெயர் மற்றும் முகவரி | : | செயின்ட் அல்போன்சா மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி<br>கணக்குப்பிள்ளைத் தோட்டம்<br>ஒட்டர்பாளையம் அஞ்சல்<br>மேட்டுப்பாளையம் சாலை<br>அன்னூர் 641 653 |
| | ஒன்றியம் | : | அன்னூர் |
| 2 | வகுப்புகள் மற்றும் அதிகபட்சமாக அனுமதிக்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை | : | 180<br>எல்.கே.ஜி. முதல் 5–ம் வகுப்பு வரை |
| 3 | புதுப்பித்தல் காலம் | : | 01.05.2016 முதல் 30.04.2019 வரை |

**மேற்படி தற்காலிக அங்கீகாரம் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.**

1. இப்பள்ளி இலவச கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம்–2009 மற்றும் தமிழ்நாடு இலவச மற்றும் கல்வி உரிமைச்சட்ட விதிகள் 2011 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிவகை/காப்புரைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
2. பள்ளி முன்பருவ/பள்ளிக்கு முந்தைய வகுப்பில்/முதல் வகுப்பில், அருகாமை பகுதியில் உள்ள நலிவடைந்த மற்றும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவினருக்கு, நுழைவு வகுப்பில் மொத்த சேர்க்கையில் 25 சதவீதத்துக்கு குறையாமல் சேர்க்கை செய்யப்பட்டு 5ம் வகுப்பு முடிக்கும் வரை அவர்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளித்திட உறுதிச் செய்யப்பட வேண்டும்.
3. பள்ளிக்கல்விக்கட்டணத்தொகை ஈடு செய்ய ஏதுவாக தனியாக வங்கி கணக்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.
4. பள்ளி பெற்றோர்களிடமிருந்து நன்கொடை (Capitation) ஏதும் வசூலிக்கக் கூடாது. மேலும் குழந்தைகளுக்கு சேர்க்கை நிமித்தம் எவ்வித தேர்வோ/ நேர்காணல் தேர்வோ நடத்தகூடாது.
5. எந்த ஒரு குழந்தைக்கும் (a) பள்ளி வயதுக்கான சான்று அளிக்காத காரணத்திற்காகவோ (b) சாதி, இன, மத அடிப்படையிலோ அல்லது பிறந்த இடம் அடிப்படையிலோ வேறு காரணத்திற்காகவோ சேர்க்கை மறுக்கப்பட கூடாது.
6. பள்ளி நிர்வாகம் கீழ்க்குறித்த காரணிகளை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
   (அ) சேர்க்கை செய்யப்பட்ட எந்த ஒரு குழந்தையும் தொடக்கக்கல்வி(VIII–ஆம் வகுப்பு) முடியும் வரை நீக்கம் செய்யக்கூடாது.
   (ஆ) எந்த ஒரு குழந்தையும் உடல் ரீதியாக/மனரீதியான துன்புறுத்தலுக்கு ஆட்படுத்தக்கூடாது.
   (இ) தொடக்கக்கல்வி முடியும் வரை குழந்தைகளை எவ்வித பொதுத் தேர்வுகளுக்கும் ஆட்படுத்தக்கூடாது.
   (ஈ) தொடக்கக்கல்வியினை நிறைவு செய்யும் குழந்தைகளுக்கு விதி எண் 21(ல்) தெரிவிக்கப்பட்டவாறு சான்று அளிக்கப்பட வேண்டும்.
   (உ) மாற்றுத் திறனாளி குழந்தைகள்/சிறப்பு கவனம் அளிக்கப்பட வேண்டிய குழந்தைகளுக்கு உரிய விதித் தளர்வுகளுடன் சேர்க்கை அளிக்கப்பட வேண்டும்.
   (ஊ) இச்சட்ட விதி எண் 23(1)ன்படி குறைந்தபட்ச முழுக் கல்வித் தகுதிபெற்ற ஆசிரியர்களே பணியில் இருக்க வேண்டும்.
   (எ) குறைந்தபட்சக் கல்வித் தகுதி பெறாத ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யக்கூடாது.
   (ஏ) விதி எண் 24 உப விதி(1)ன் கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஆசிரியர்கள் தங்கள் பணியினை மேற்கொள்ள வேண்டும் எந்த ஒரு ஆசிரியரும் தனிப் பயிற்சி (tuition) வகுப்பு எடுத்திட பள்ளி நிர்வாகம் அனுமதிக்கக்கூடாது.
7. தமிழ்நாடு பள்ளிக்கல்வி பொதுக்கல்வி வாரியத்தால் ஒப்பளிக்கப்பட்ட பாடத்திட்டங்கள் மற்றும் அரசு ஆணை143 ப.க.(எக்ஸ்2) துறை நாள்19/9/2011ல் வரையறுக்கப்பட்ட முப்பருவ பாடமுறை மற்றும் தொடர் முழு மதிப்பீட்டு முறை பள்ளிகளில் தவறாது பின்பற்ற வேண்டும்.
8. சட்டப்பிரிவு 19ல் தெரிவிக்கப்பட்ட வரையறை மற்றும் தரங்களை (Norms & Standards) பள்ளிகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
9. பள்ளி வளாகத்திலோ அல்லது வெளியிடத்திலோ பள்ளியின் பெயரால் அங்கீகாரம் பெறாத பள்ளிகள் ஏதும் செயல்படக்கூடாது.

10. பள்ளிக்கட்டடம், கல்விப் பணிக்காக அல்லது கல்வி திறன் வளர்ப்பு பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
11. தமிழ்நாடு பதிவு பெற்ற சங்கங்கள் விதி 1975ன்படி ஒரு சங்கமாகவோ அல்லது பதிவு பெற்ற அல்லது நடைமுறையிலுள்ள சட்டபடி அமைக்கப்பட்ட பொது அறக்கட்டளையால் பள்ளி நிர்வகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. பள்ளி தனி நபர் இலாபத்திற்காகவோ குழுக்களின் லாபத்திற்காகவோ அல்லது கூட்டு நபர்கள் லாபத்திற்காகவோ பள்ளி செயல்படக்கூடாது.
13. பள்ளி வரவு செலவுக் கணக்குகள் பட்டயக் கணக்காயரால் முறைப்படி ஆய்வு செய்து அதன் நகல் அதிகார பூர்வ அலுவலருக்கு அளித்தல் வேண்டும். இக்கணக்குகள் ஆண்டுதோறும் அங்கீகாரம் அளித்திட அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
14. பள்ளி அங்கீகார குறியீடு அனைத்து கடிதத் தொடர்பிலும் தவறாது குறிப்பிடப்பட வேண்டும்.
15. துறையால் அவ்வப்போது கோரப்படும் அறிக்கைகள்/தகவல்களையும் பள்ளி நிர்வாகம் உடனுக்குடன் அனுப்பி வைக்க வேண்டும். பள்ளி அங்கீகாரத்தை நிறைவு செய்திடவும்/பள்ளி நடைமுறையில் எழும் சிக்கல்களை நிவர்த்தி செய்து பள்ளி தொடர்ந்து நடைபெற நிர்வாகத்தால்/அரசால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளை பள்ளி நிர்வாகம் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.
16. இச்சட்ட விதிகள் மற்றும் வரையறைகள் மற்றும் அங்கீகாரத்திற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறியதாக கண்டறியப்படும்பட்சத்தில் இந்த அங்கீகார ஆணை திரும்ப பெறப்படும்.
17. தமிழ்நாடு தனியார் பள்ளிக் கட்டண நிர்ணக்குழு சட்டம்–2009ன்படி பள்ளிக்கு கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கட்டணம் மட்டுமே மாணவர்களிடமிருந்து கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும்.
18. பள்ளிப் பாதுகாப்பு நலன் கருதி கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் சார்ந்து அரசு வெளியிட்டுள்ள அரசாணை எண் 131 பள்ளிக்கல்வி(எக்ஸ்–2) துறை நாள்.10–09–2006ல் தெரிவிக்கப்பட்டுள்ளது அந்நெறிமுறைகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும். மேலும் மாணவர்கள் பாதுகாப்பு நலன் குறித்து தொடக்கக்கல்வி இயக்குநரால் வழங்கப்பட்ட அறிவுரைகளை தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும். மேலும் துறையால் அவ்வவ்போது வழங்கப்படும் அறிவுரைகள், நிபந்தனைகள் அனைத்தும் பள்ளியின் நிர்வாகத்தால் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
19. எல்.கே.ஜி. முதல் 5 அம் வகுப்புகளை வரை தரைத்தளத்தில் மட்டுமே செயல்பட வேண்டும்.
20. இப்பள்ளி வளாகத்தில் இப்பள்ளி செயல்பாட்டினைத் தவிர குடியிருப்புகளோ, அவ்வாறு வியாபார நோக்குக் கொண்ட எந்த கடைகளோ அல்லது வேறு எந்த நிறுவனமோ இருத்தல் கூடாது.
21. மாற்றுத் திறன் குழந்தைகளுக்காக (ramp) சாய்தளம் மற்றும் (handrails) கைப்பிடிமான வசதிகள் பள்ளி மற்றும் கழிப்பறைகளில் ஏற்படுத்தப்பட வேண்டும்.
22. இவ்வங்கீகாரம் முடிவடையும் நாளுக்கு, மூன்று மாதங்களுக்கு முன்னரே தொடர் அங்கீகாரம் கோரும் கருத்துரு உரிய அனைத்து விவரங்கள் மற்றும் இணைப்புகளுடன் கீழே ஒப்பமிட்டவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
23. அரசாணை எண்.270 பள்ளிக்கல்வி(எக்ஸ்2)துறை நாள்22–10–2012–ன்படி அனைத்து அம்சங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளது என சார்ந்த உதவித் தொடக்கக்கல்வி அலுவலரின் சான்று பெறப்படல் வேண்டும்.
24. பயிற்றுமொழி சார்ந்த உச்ச நீதிமன்ற தீர்ப்பில் எவ்விதமான ஆணை வெளியிடப்படுகிறதோ அந்த ஆணைக்குட்பட்டு செயல்பட வேண்டும்.
25. மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் ஒழுங்குப்படுத்த நெறிமுறைப் படுத்தப்பட்ட நெறிமுறைகள் 7(அ) இல் குறிப்பிட்டுள்ளவாறு மழலையர் மற்றும்

தொடக்கப்பள்ளி வகுப்புகளில் தமிழ் மொழிப்பாடம் கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும். தாய்மொழி தமிழ் அல்லாத மாணவர்களுக்கும் தமிழ் மொழியை கூடுதல் மொழிப் பாடமாக கற்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

26. பள்ளியின் பெயரை எக்காரணத்தை முன்னிட்டும் மெட்ரிகுலேசன் பள்ளி, ஆங்கிலப்பள்ளி என பெயர் மாற்றம் செய்யக்கூடாது, மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி என்றே இருத்தல் வேண்டும்.

27. எந்த ஒரு காலத்திலும் அரசின் நிதியுதவி கோரக்கூடாது.

28. அனுமதி வழங்கப்பட்ட கட்டிடத்தில் மட்டுமே பள்ளி செயல்பட வேண்டும் முன் அனுமதி பெறாமல் கட்டிடத்தை மாற்றக்கூடாது.

29. ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் இரத்து செய்யப்பட்டதாலோ அல்லது நீக்கம் செய்யப்பட்டதாலோ பள்ளிகளில் ஆசிரியராக பணியாற்ற தகுதி படைத்தவர் அல்ல என தெரிவிக்கப்பட்ட எந்த ஒரு நபரையும் மற்றும் ஒழுக்கக்கேடு காரணமாக தண்டனை அடைந்த எந்த ஒரு நபரையும் பள்ளியில் ஆசிரியராக நியமனம் செய்யக்கூடாது.

30. அனைத்து ஆவணங்கள், பதிவேடுகள் பள்ளியின் பெயர் பலகை ஆகியவை மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி ( Nursery and Primary School) பெயரில் இருத்தல் வேண்டும்.

31. வாகனம் உள்ள பள்ளிகளில் உரிமம் பெற்ற தகுதியுடைய ஓட்டுநரைக் கொண்டு மட்டுமே வாகனத்தை இயக்க செய்தல் வேண்டும் மாணவ/மாணவியரின் பாதுகாப்பிற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருப்பதோடு போக்குவரத்துத்துறை விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

32. பள்ளியின் பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வைப்பு நிதியாகச் செலுத்தப்பட்டுள்ள அறக்கட்டளைத் தொகையை உரிய காலத்தில் மீண்டும் பள்ளியின் பெயரில் புதுப்பிக்கப்பட வேண்டும்,

33. அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் மாணவர்களை சேர்க்கக்கூடாது.

34. பள்ளியில் கட்டிட உறுதிச்சான்று பெற்ற பின்னர் கட்டிடத்தின் உறுதித் தன்மை பாதிக்கும் வகையில் பிற வேலைகள் ஏதும் செய்திடல் கூடாது.

35. தற்போது உள்ள சுகாதாரச் சான்று, தீயணைப்புத் துறையின் தடையின்மைச் சான்று ஆகிய காலம் முடிவு பெறுவதற்கு முன்பே அடுத்த ஆண்டிற்கான ஆணையினை உரிய அலுவலர்களிடம் பெற்று மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலரிடம் முன்னிலைப்படுத்த வேண்டும்.

36. பள்ளி வளாகம் பயிலும் மாணவர்களுக்கு அனைத்து வகைகளிலும் பாதுகாப்பானதாக இருப்பதுடன் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோரது முழு பாதுகாப்பினையும் பள்ளி நிர்வாகம் அனைத்து வகையிலும் உறுதி செய்து கொள்ள வேண்டும் பள்ளி மாணவர், மாணவியர் ஆசிரியர்கள் பணியாளர்கள், ஆகியோரின் உடல் மற்றும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் பள்ளி வளாகம், கட்டிடம் ஆகியவை இல்லாதவாறும் எவ்வித அசம்பாவிதம் ஏற்படாதவாறும் நிர்வாகம் கவனித்துக் கொள்ள வேண்டும் அசம்பாவிதம் ஏதும் ஏற்படும்பட்சத்தில் நிர்வாகியே முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

37. பள்ளியை சுற்றி சுற்றுப்புற சுவர்கள் அமைத்து பள்ளி மாணவர்கள் அனைவரும் சிரமமின்றி வெளியேறும் வகையில் பெரிய வழி அமைத்தல் வேண்டும், வகுப்பறைகள் இரு வழிகள் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

38. மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகளில் காற்றோட்டம், வெளிச்சம் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

39. மாணவர்களுக்கு போதிய குடிநீர் வசதி, கழிப்பிட வசதி விளையாட்டிடம் ஏற்படுத்த வேண்டும்.

40. நிலத்தடி நீர்த்தொட்டி, திறந்த நிலையில் உள்ள தொட்டிகள் மற்றும் மின் மோட்டார்கள் ஆகியவை இரும்பு மூடி கொண்டு பூட்டி வைக்கப்பட வேண்டும்.

41. பள்ளி வளாகத்தின் எப்பகுதியிலும் தீப்பற்றக்கூடிய பொருட்களை குவித்து வைக்கக்கூடாது. தீயணைக்கும் கருவிகள் பள்ளிக்கு போதுமான அளவில் இருத்தல் வேண்டும்.

42. கட்டிட உறுதிச் சான்று, கட்டிட உரிமம், சுகாதாரச் சான்று, தீத்தடுப்பு துறையினரின் தடையின்மைச் சான்று ஆகியவை காலம் முடிவடைந்த பிறகு பள்ளி ஒரு நாளும் நடத்தப்படக் கூடாது.

43. இந்நிறுவனம் மேற்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்ய தவறினாலோ, மாணவர்கள் நலனுக்கு ஊறு விளைவிக்கும் எந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டாலோ, வழங்கப்பட்ட ஒப்புதல் தானாக இரத்து செய்யப்படுவதுடன் இதர சட்டபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவும் நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

44. இடவசதி சார்பான நிபந்தனைகள் அரசு விதிகளுக்குட்பட்டது

<u>கூடுதல் நிபந்தனைகள்</u>

1. அரசாணை எண்.270 பள்ளிக்கல்வி(எக்ஸ்2)துறை நாள்22–10–2012–ன்படி மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் கழிப்பிட வசதி ஏற்படுத்த வேண்டும்.
2. அனைத்து ஆசிரியர்களும் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.
3. அன்னையர் குழு ஏற்படுத்த வேண்டும்.
4. வகுப்பறைகள் அதிகப்படுத்தப்பட வேண்டும்

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தற்காலிக தொடர் அங்கீகார ஆணை மாணவர்களின் கல்வி நலன் கருதி மட்டும் வழங்கப்படுகிறது. உடனடியாக மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் சரி செய்து முன்னிலைப்படுத்த வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் தங்கள் பள்ளியின் அங்கீகாரம் திரும்ப பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன் மூலம் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது

11/11/16

மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்,
கோயம்புத்தூர்.

11.11.16

பெறுநர்

நிர்வாகி,
செயின்ட் அல்போன்சா மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி
கணக்குப்பிள்ளைத் தோட்டம்
ஒட்டர்பாளையம் அஞ்சல்
மேட்டுப்பாளையம் சாலை
அன்னூர் 641 653

நகல்

1. உதவித்தொடக்கக்கல்வி அலுவலர், அன்னூர் , கோயம்புத்தூர் மாவட்டம்
2. உதவித்தொடக்கக்கல்வி அலுவலர் (மழலையர்). கோவை
3. முதன்மைக் கல்வி அலுவலர் கோயம்புத்தூர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
4. தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநர் சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.